*4*

# கிறிஸ்து: தீர்க்கதரிசி, ஆசாரியர், மற்றும் இராஜா

*இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனும் மனுஷகுமாரனுமாயிருந்தார்; அவர் மனுஷீகமும் தெய்வீகமும் நிறைந்தவராயிருந்தார். மனுஷனாகவும் தேவனாகவும் பூமியிலே அவருக்கு இருந்த கடமை என்ன? இயேசு குறைந்தபட்சம் பூமியிலே மூன்று கடமைகளை நிறைவேற்றினார் என்று வேதம் சொல்லுகிறது: அவர் "தீர்க்கதரிசியாக, ஆசாரியராக, மற்றும் ராஜாவாக" இருந்தார். அந்த மூன்று கடமைகளின் குறிப்பீடுகளை நாம் அறிய விரும்புகிறோம்.*

## இயேசு கிறிஸ்து ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார், இருக்கிறார்

நியாயப்பிரமாணம் வரவிருந்த மாபெரும் தீர்க்கதரிசியைக் குறித்து முன்னுரைத்தது. மோசே சொன்னார்,

> உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. ஓரேபிலே சபை கூட்டப்பட்ட நாளில்: நான் சாகாதபடி என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தை இனி நான் கேளாமலும், இந்தப் பெரிய அக்கினியை இனி நான் காணாமலும் இருப்பேனாக என்று உன் தேவனாகிய கர்த்தரை நீ வேண்டிக் கொண்டதன்படியெல்லாம் அவர் செய்வார். அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: அவர்கள் சொன்னது சரியே. உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன் (உபாகமம் 18:15-19).

இந்த தீர்க்கதரிசனத்தால், இயேசுவின் நாட்களிலிருந்த யூதர்கள் மோசேயைப் போன்ற, குறிப்பான ஒரு தீர்க்கதரிசி வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆசாரியர்களும் லேவியர்களும் யோவான் ஸ்நானகன் யார் என்று கண்டறியும் பொருட்டு முயற்சித்து, அவரைக் கேட்டார்கள், "நீர் *(அந்த)* தீர்க்கதரிசியா?" (யோவான் 1:21; வலியுறுத்தல் என்னுடையது).

இயேசு ஒரு தீர்க்கதரிசி மட்டுமல்ல என்று அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்கள்; மாறாக, மோசேயைப் போன்ற (அந்த) தீர்க்கதரிசியாக இருந்தார். அப்போஸ்தலர் நடபடிகள் 3ல் பேதுரு இயேசுவைப் பற்றி பிரசங்கித்து (3:13), "பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்" (3:14), "ஜீவாதிபதி" (3:15),

*“கிறிஸ்து உங்களிடத்தில் அனுப்பப்பட்டவர்” (3:20) என்றெல்லாம் சொன்னார். மோசேயினால் முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசி இயேசுவே என்று அவர் அடையாளப் படுத்தினார் (3:22, 23).*

*இயேசுவின் வாழ்நாளில், இயேசு சில வேளைகளில் உபாகமத்தில் பேசப்பட்ட தீர்க்கதரிசி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேரை அவர் போஷித்தபின், ஜனங்கள், “மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி” என்றார்கள் (யோவான் 6:14). இயேசு தேவாலயத்தில் போதித்துக் கொண்டிருந்ததை சிலர் கேட்டபொழுது, ‘‘மெய்யாகவே இவர் தீர்க்கதரிசியானவர்’’ என்றார்கள் (யோவான் 7:40).*

*இயேசுவை மோசேயை போன்ற தீர்க்கதரிசி என்று ஏற்றுக்கொள்ள முடியாதவர்களும்கூட அவரை தீர்க்கதரிசி என்று ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.*[1]

- *இயேசு தமது அற்புதமான அறிவை கிணற்றண்டையில் இருந்த பெண்ணிடம் விளங்கச் செய்த பின்பு, அவள், ‘‘ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்’’ என்றாள் (யோவான் 4:19).*
- *நாயீன் ஊர் வாலிபனை மரித்தோரிலிருந்து இயேசு எழுப்பியபோது, ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, ‘‘மகா தீர்க்கதரிசி நமக்குள்ளே தோன்றியிருக்கிறார்!’’ என்றார்கள் (லூக்கா 7:16).*
- *ஒரு பிறவிக் குருடனை இயேசு சொஸ்தமாக்கினபின்பு, “நீ என்ன சொல்லுகிறாய்?” என்று கேட்கப்பட்ட கேள்விக்கு “அவர் தீர்க்கதரிசி” என்ற வார்த்தைகளால் பதில் சொன்னான் (9:17).*
- *இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் ஜனங்கள் தம்மை யாரென்று சொல்லுகிறார்கள் என்று கேட்டபோது அவர்கள், “சிலர், யோவான் ஸ்நானகன் என்றும்; சிலர் எலியா என்றும்; வேறுசிலர், எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர்” என்றும் பதிலளித்தார்கள் (மத்தேயு 16:14).*
- *இயேசு வெற்றிகரமாக எருசலேம் பட்டணத்தில் நுழைந்தார், சிலர் “இவர் யார்?” என்று கேட்டார்கள். அதற்கு மற்றவர்கள், “இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த, தீர்க்கதரிசியாகிய இயேசு” என்றார்கள் (மத்தேயு 21:10, 11).*
- *இயேசு உயிர்த்தெழுந்தபின், அவர் தம்முடைய சீஷர்களில் இரண்டுபேர் பேசிக்கொண்டு போகையில், எதிர்பாராமல் அவர் அவர்களை சந்தித்தார். அவர்கள், “நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே; அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்” (லூக்கா 24:19), என்று பேசிக்கொண்டார்கள்.*

*இயேசு ஒரு தீர்க்கதரிசி என்பதில் நமக்கு எதுவும் கேள்வியிருக்குமேயானால், அவர் தாமே அதை தீர்த்துவைத்துள்ளார். தாம் ஒரு தீர்க்கதரிசியென்று அறிக்கையிட்டு அவர் சொல்லும்போது, “தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான்” என்றார்*

*(மத்தேயு 13:57).*

*நமக்குள்ள அனைத்து ஆதாரங்களையும் வைத்துப் பார்த்தால் இயேசு ஒரு தீர்க்கதரிசியே என்பது தெளிவு, ஆனால் அவர் தீர்க்கதரிசி என்பதில் உள்ள குறிப்பிடத்தக்க விஷயம் என்ன? அவர் பூமியிலே வாழ்ந்த காலத்தில் இருந்த ஜனங்களுக்கு என்ன அர்த்தத்தை அது கொடுத்தது, இன்று நமக்கு என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது?*

**இயேசு தேவனுக்கென்று பேசினார்**

*தீர்க்கதரிசியாக, இயேசு கிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்தார் அவருக்காகப் பேசினார். பழைய ஏற்பாடு முழுவதும், தேவனுக்காக பேசுவதுதான் தீர்க்கதரிசியின் கடமையாயிருந்தது. தீர்க்கதரிசியின் செய்தி எப்போதுமே "கர்த்தர் சொல்லுகிறதாவது!"[2] என்றுதான் நிறைவுறும்.*

*இயேசு தாமே தேவனுக்காக பேசினதாக உரிமை கோரினார். அவர் "உங்களைக் குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு. என்னை அனுப்பியவர் சத்தியமுள்ளவர்; நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவான் 8:26). இயேசுவை தேவன் அறிக்கையிட்டு அவருடைய மறுரூப நேரத்தில் இயேசு தேவனுக்காக பேசுவதைக் குறிப்பிட்டார். "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்றார் (மத்தேயு 17:5ஆ). கூடுதலாக, எபிரெய எழுத்தாளர் குறிப்பிட்டு, "பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரை சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" என்று சொன்னார் (எபிரெயர் 1:1, 2).*

**நாம் அவருக்கு செவிகொடுக்க வேண்டும்**

*இயேசு நமது தீர்க்கதரிசியாதலால், அவர் நமக்கு என்ன சொல்லுகிறார் என்று நாம்செவிசாய்த்துக்கேட்கவேண்டும்!இயேசுவின்போதனைகளெல்லாம்இன்னொரு ஞானமுள்ள மனுஷனின் வார்த்தைகள் அல்ல; அவைகள் தேவனிடத்திலிருந்து நேரடியாக வரும் வார்த்தைகள்! அவருடைய செய்தி பரத்திலிருந்து வந்தவை! அவருக்கு செவிகொடுத்து அந்த செய்திக்கு எச்சரிக்கையடையாமல் போவோமானால், கர்த்தராகிய தேவனுடைய வார்த்தைகளையே புறக்கணிப்பதாகும். அவர், "இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச்செவி கொடுங்கள்" என்று சொன்னதை புறந்தள்ளும் செயல் (மாற்கு 9:7).*

## இயேசு கிறிஸ்து ஒரு ஆசாரியராக இருந்தார், இருக்கிறார்

*எபிரெயர் புத்தகத்தில் இயேசு நம்முடைய பிரதான ஆசாரியராக இருப்பதாக வெளிப்படுத்தப்படுகிறது. இந்த உண்மையை மீண்டும் மீண்டும், எழுத்தாளர் வலியுறுத்துகிறார்:*

> *... நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான*

*ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள் (3:1).*

*வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகாபிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியால் (4:14).*

*அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; ... மெல்கிசெதேக்கின் முறைமையின் படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார் (5:5-10).*

*மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்தில் ... ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு (எபிரெயர் 8:1).*

*கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு ... (9:11).*

*கிறிஸ்துவின் ஆசாரித்துவம் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்த ஆசாரியத்துவத்துக்கு பலவகையிலும் ஒப்பாக இருந்தது. நியாயப்பிரமாணத்தின் கீழ் பிரதான ஆசாரியர்கள் தேவனால் நியமிக்கப்பட்டது போலவே, கிறிஸ்துவும் நியமிக்கப்பட்டார் (எபிரெயர் 5:4, 5); பழைய உடன்படிக்கையின் கீழ் ஆசாரியர்கள் ‘‘காணிக்கைகளையும் பலிகளையும்’’ செலுத்தியது போல, கிறிஸ்துவும் செய்தார் (எபிரெயர் 8:3).*

*இருப்பினும், மோசேயின் யுகத்தின் கீழ் இருந்த பிரதான ஆசாரியர்களுக்கும் கிறிஸ்துவிற்குமிடையே உள்ள வேறுபாடுகளை எபிரெயர் புத்தகம் மிகத் தெளிவாகக் காட்டுகிறது:*

1. *அவர்கள் பரிதபிக்கக் கூடாதவர்கள், ஆனால் கிறிஸ்துவோ நம்மோடு கூட பரிதபிக்கிறவராயிருக்கிறார் (எபிரெயர் 4:15).*
2. *அவர்கள் லேவி கோத்திரத்திலிருந்து வரும் சந்ததி, ஆனால் கிறிஸ்துவோ மெல்கிசேதேக்கின் முறைமையின்படி வந்தவர் (7:15).*
3. *சட்ட ரீதியான தேவைகளினிமித்தம் அவர்கள் ஆசாரியர்களானார்கள், ஆனால் கிறிஸ்து அழிவில்லாத வாழ்க்கையின் வல்லமையினால் ஆசாரியரானார் (7:16).*
4. *அவர்கள் ஆணையில்லாமல் ஆசாரியர்களானார்கள், இவரோ ஆணையோடே ஆசாரியர் ஆனார் (7:20, 21).*
5. *அவர்களின் ஆசாரித்துவம் தற்காலிகமானது, ஆனால் கிறிஸ்துவின் ஆசாரியத்துவமோ நித்தியமானது (7:23, 24).*
6. *அவர்கள் பாவமுள்ளவர்களாயிருந்தனர், கிறிஸ்து பாவமில்லாதிருந்தார் (7:27).*
7. *அவர்கள் மிருகபலி செலுத்தினர், கிறிஸ்து தம்மைத்தாமே பலியாக்கினார் (9:12).*
8. *அவர்கள் வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், நிழலாய் மாத்திரம் இருந்தது (10:1); கிறிஸ்துவோ வந்த நன்மைகளுக்குரிய*

பிரதான ஆசாரியராயிருக்கிறார் (9:11).

9. அவர்கள் தினந்தோறும் பலிசெலுத்தினார்கள், ஆனால் கிறிஸ்து ஒரேதரம் பலியிட்டார் (10:11, 12).

எபிரெயர் புத்தகத்திற்கு அப்பால், மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்துக்கள் கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியத்தை வேறே பதங்களில் பேசுகிறது. பவுல், "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" என்று எழுதினார் (1 தீமோத்தேயு 2:5). யோவான் சொன்னார், "ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோவான் 2:1).

**இயேசு மனிதனுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுகிறார்**

ஆசாரியர்கள் மனிதர்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுகிறவர்களாயிருந்தார்கள். தீர்க்கதரிசிகள் தேவனுடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் இப்படியாக தேவனை மனுஷர்களிடத்தில் முகவர்களாக அறிவிக்கும் போது, ஆசாரியர்கள் மனுஷர்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுகிறவர்களாயிருந்தனர். பழைய உடன்படிக்கையில் ஆசாரியர்கள் தேவனுடைய கோபாக்கினையை அமைதிப்படுத்தும்படி பலிகளைச் செலுத்தி அப்படிச் செய்தார்கள். இயேசு கிறிஸ்துவும் அப்படியே, தம்மை மனுஷருடைய பாவங்களுக்காக பலியாக்கி தேவ நீதியின் கோரிக்கையை திருப்திபடுத்தினார். அவரது பலியோடு கூட, இயேசு தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக நமது சார்பாக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். எபிரெயர் 7:25 சொல்லுகிறது, "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையில் அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்."

இன்றைய கிறிஸ்தவர்களுக்கு, கிறிஸ்து நமது "தேவக்காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கிறார்" (எபிரெயர் 2:17) என்பது நல்ல செய்தி. இன்னும் சிறப்பான செய்தியென்னவெனில் அவர் நம்முடைய நிலைமைக்கு பரிதபிக்கிற பிரதான ஆசாரியராயிருக்கிறார் என்பது தான். நாம் வாசிக்கிறதாவது,

> ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார் (எபிரெயர் 2:18).
>
> நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவமில்லாதிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார் (எபிரெயர் 4:15).

நம்முடைய பிரதான ஆசாரியர், நமது சார்பாக தேவனிடத்தில் பரிந்து பேசுகிறவரும், பாடுபடுதல், சோதிக்கப்படுதல், மனுஷீகத்தில் இருப்பது என்றால் என்ன என்பது அவருக்குத் தெரியும் என்பதால் நாம் களிகூர முடியும்!

### அவர் நமக்கு தைரியம் கொடுக்கிறார்

நமக்காகப் பரிதபிக்கும் பிரதான ஆசாரியராகிய இயேசு நமக்கு இருக்கிறபடியால், நாம் தைரியமாக தேவனிடத்தில் சேரமுடியும். எபிரெயர் 4:16 கீழ் வருமாறு சொல்லுகிறது:

> ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாகக் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

இயேசு தேவனுக்காக நம்மிடத்தில் பேசும் தேவனுடைய தீர்க்கதரிசி மாத்திரமல்ல, ஆனால் அவர் நம்முடைய மத்தியஸ்தராயிருந்து நமக்காக தேவனிடத்தில் பேசுகிறவராயுமிருக்கிறார். அவருடைய பரிந்துரைத்தலை சாதகமாக்கிக் கொண்டு, தேவன் - கிறிஸ்துவின் பரிந்துரையின் மூலம் - நம்முடைய ஜெபங்களைக் கேட்டு நமது தேவைகளை சந்திக்கிறார் எனும் விசுவாசத்தோடு கூட தேவனுடைய சிங்காசனத் தண்டையிலே தைரியமாய் சேருவோமாக.

## இயேசு கிறிஸ்து ராஜாவாக இருந்தார், இருக்கிறார்

ஒரு தெய்வீக ராஜா வருகிறார் என்பதாக தீர்க்கதரிசிகள் காலங்காலமாக முன்னுரைத்தார்கள். தேவன் தாவீதின் சிங்காசனத்தில் அவனுடைய சந்ததியை அமரப்பண்ணி அந்த சிங்காசனத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பார் என்று சொன்னார் (2 சாமுவேல் 7:12-16). தீர்க்கதரிசிகள் அந்த வாக்குத்தத்தங்களை வெளியிட்டார்கள். ஏசாயா சொன்னார், “இதோ ஒரு ராஜா நீதியாக அரசாளுவார்” (ஏசாயா 32:1). மேலும் அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார்,

> நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்;
> கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்;
> அவர் நாம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா,
> சமாதான பிரபு என்னப்படும்.
> தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி,
> அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும்,
> நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும் (ஏசாயா 9:6, 7).

### இயேசு தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட ராஜா

தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருப்பார் என்று சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை இயேசு நிறைவேற்றினார் என்று புதிய ஏற்பாடு தெளிவாக்குகிறது. காபிரியேல் தூதன் மரியாளுக்கு வெளிப்படுத்தி, அவள் பெறப்போகும் குழந்தை:

> அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன்

*என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான் (லூக்கா 1:32, 33).*

உண்மையில் இயேசு, ராஜாவாக - பூமியிலிருக்கும் போதே ஏற்றுக் கொள்ளப்பட்டார், அவரது மரணத்தின் போதும், அவர் பரமேறிப்போன பின்பும் அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டார். மத்தேயு 2:2ன் படி, இயேசுவைத் தேடி வந்த சாஸ்திரிகள், "யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே?" என்று கேட்டார்கள். யோவான் 12:13 சொல்லுகிறது, இயேசு கடைசியாக எருசலேமுக்குள் நுழைந்தபோது, ஜனக் கூட்டம் சத்தமிட்டு, "ஓசன்னா! கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்றார்கள். யோவான் 18:37ல் பிலாத்து "நீ யூதருடைய ராஜாவோ?" என்றான், என்று வாசிக்கிறோம். இயேசு பிரதியுத்தரமாக, "நீர் சொல்லுகிறபடி நான் இராஜாதான்" இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன் என்றார். சிலுவைக்கு மேலாக, போர்ச்சேவகர்கள் பிலாத்துவின் வாசகமாகிய, "இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு" என்று எழுதினார்கள் (மத்தேயு 27:37).

கொலோசெயர் 1:13ன் படி, கிறிஸ்தவர்கள் "... அவருடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்குட் படுத்தப்பட்டிருக்கிறார்கள்." வெளிப்படுத்தின விசேஷத்தில், தேவ ஆட்டுக்குட்டியாகிய. இயேசு கிறிஸ்துவை, யோவான் விவரித்து, "கர்த்தாதி கர்த்தாவும், இராஜாதி இராஜாவும்" என்று சொன்னார் (வெளிப்படுத்தின விசேஷம் 17:14).

**நாம் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும்**

ராஜாவாக, நமக்கு கட்டளையிட இயேசுவுக்கு உரிமையுண்டு. அவருக்கு சகல அதிகாரமும் கொடுக்கப் பட்டுள்ளது (மத்தேயு 28:18) அவருடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறோம் (மத்தேயு 7:21). நாம் கீழ்ப்படிய மறுத்தால், ஆக்கினைக்குள்ளாவோம். பவுல் மறுபடியும் இயேசு வரும்போது, "தேவனை அறியாதவர்களுக்கும் *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும்* நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு" வருவார் என்று சொன்னார் (2 தெசலோனிக்கேயர் 1:7, 8; வலியுறுத்துதல் என்னுடையது).

ராஜாவுக்கு கீழ்ப்படிந்திருக்கும் பிரஜைகள் அவருடைய பாதுகாப்பை அனுபவிப்பார்கள். கிறிஸ்தவர்கள் மாற்றப்பட்டுள்ள இராஜ்யம் அசையாதது (எபிரெயர் 12:28). தோல்வியைக் காணாத ராஜாவாலே நாம் ஆளுகை செய்யப்படுகிறோம்! "ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிற" அகில உலகத்துக்கும் மகாபெரிய ராஜாவை நாம் பின்பற்றிப் போகிறபடியால், தலை நிமிர்ந்து நிற்போம் (1 தீமோத்தேயு 6:15)! இந்த நட்புறவில் சந்தோஷப்பட்டு களிகூருகிற வேளையில், ராஜாவுக்கு முன்பாக கீழ்ப்படிதலோடு தலைவணங்கி எல்லாவிதத்திலும் அவருடைய சித்தத்தைத் தேடுவோம், அவரது கோபாக்கினையைத் தவிர்ப்போம்.

# முடிவுரை

*கிறிஸ்துவின் செயல் கடமைகள் மூன்றுவகைப்படும்: அவர் தீர்க்கதரிசியாக, ஆசாரியராக, ராஜாவாக இருக்கிறார். முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசியாய், நம்மிடம் தேவனுடைய சார்பில் பேசுகிறார். நாம் அவருக்கு செவி சாய்க்க வேண்டும்! நம்முடைய ஆசாரியராக அவர் நமக்காக பரிந்து பேசுகிறார். அவர் மூலமாய் நாம் தேவனிடத்தில் தைரியமாகச் சேரமுடியும். ராஜாவாக, அவர் தமது ராஜ்யத்துக்கு கட்டளையிடுகிறார், அது என்றைக்கும் நிலைத்திருக்கிறதும், நிறைவானதுமான வெற்றியைக் கொடுக்கிறது. நமது ராஜாவை நாம் கனப்படுத்தி அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.*

*நீங்கள் இயேசு கிறிஸ்துவை எப்படி பார்க்கிறீர்கள்? அவரது செயல் கடமைகளான தீர்க்கதரிசி, ஆசாரியர், மற்றும் ராஜாவாகப் பார்க்கத் தவறுவோமானால், அவர் உங்களுக்கு என்ன செய்துள்ளாரோ அதை நீங்கள் முழுமையாய் பாராட்ட முடியாது. மிக முக்கியமாக, அவருக்கு நீங்கள் எப்படி செயல்வடிவ பதிலைச் சரியாக அளிக்க முடியும்? அவர் தேவனிடத்திலிருந்து வந்த தீர்க்கதரிசி என்ற ரீதியில் செவி சாய்க்கிறீர்களா? அவரை உங்களுக்கு பிரதான ஆசாரியனாக ஏற்றுக் கொண்டு அதினால் வரும் பயன்களை தழுவிக் கொள்ளக் கூடுமா? அவருடைய ராஜ்யத்தில் இருப்பதால் கிடைக்கும் ஆசீர்வாதங்களை அனுபவிப்பீர்களா? "பாவமன்னிப்பாகிய மீட்பை" அளிக்கும் அவருடைய ராஜ்யத்துக்குள் உட்படும் பிரவேசத்தின் சந்தர்ப்பத்தை அவர் உங்களுக்கு அளிக்கிறார் (கொலோசெயர் 1:13, 14).*

*கிறிஸ்துவின் இராஜ்யத்தில் கிடைக்கும் சந்தோஷத்தை அறிந்து கொள்ள, அவருடைய போதனைகளை ஏற்றுக் கொள்ளுங்கள், அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியுங்கள். நீங்கள் இயேசுவை விசுவாசிக்கும்படி கட்டளையிடப்படுகிறீர்கள் (காண்க யோவான் 8:24), அவரை தேவனுடைய குமாரன் என்கிற உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள் (மத்தேயு 10:32), உங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்புங்கள் (லூக்கா 13:3), உங்கள் பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பண்ணப்படுங்கள் (மாற்கு 16:16).*

---

குறிப்புகள்

[1]*ஜனங்கள் இயேசுவை தீர்க்கதரிசியாக ஏன் ஏற்றுக்கொள்கிறார்கள்? அவர் தேவனுடைய வசனத்தை அதிகாரத்தோடே போதித்தார். பழைய ஏற்பாட்டிலே தீர்க்கதரிசிகள் செய்தது போலவே, அவரும் அற்புதங்களை நடப்பித்தார், அற்புத வரங்களின் அறிவை (காண்க மத்தேயு 9:4; யோவான் 4:19; லூக்கா 7:39) சில பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் போல் வெளிப்படுத்தினார்.* [2]*ஏசாயா 1:2அ வைக் காண்க; ஆமோஸ் 1:3அ; மீகா 1:1அ; செப்பனியா 1:1; ஆகாய் 1:2; சகரியா 1:1; மல்கியா 1:1.*